செ.வெ.எண் 276 நாள் 21.07.2017

பத்திரிக்கை /தொலைகாட்சி செய்தி

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி 18 வயது முதல் 21 வயது பிரிவில் உள்ள இளம் வாக்காளர்கள் விடுபடாமல் (No voters to be left behind) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் பொருட்டு 09.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய இரு நாட்களில் சிறப்பு முகாம் நடைபெற உத்தரவிடப்பட்டது. அதன்படி திருநெல்வேலி மாவட்டத்தில் 09.07.2017 அன்று முதல் சிறப்பு முகாம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக வருகின்ற 23.07.2017 ஞாயிற்றுக் கிழமை இரண்டாவது சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1368 வாக்குச் சாவடி மையங்கள் ( Designated Locations ) உள்ளன. அதில் 2931 வாக்குச் சாவடிகள் (Polling Stations) அமைந்துள்ளன. ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் 23.07.2017 அன்று ஆஜராகி, காலை 9.30 முதல் மாலை 5.30 வரை விடுபட்ட 18-19 இளம் வயதுடைய புதிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம்-6 வழங்கி, பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை திரும்ப பெறுவார்கள். இந்த அரிய வாய்ப்பினை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விடுபட்ட 18-19 இளம் வயதுடைய அனைத்து புதிய வாக்காளர்கள் பயன்படுத்தி பயனடையுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக கூடுதல் விபரங்களை அறிந்து கொள்ள கீழ்க்கண்ட தொலைபேசிகளை தொடர்பு கொள்ளலாம். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக தேர்தல் பிரிவு தொலைபேசி எண் 0462-2501181, சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அலுவலகம் : 04634-260124, திருநெல்வேலி கோட்டாட்சியர் அலுவலகம் : 0462-2501333, தென்காசி கோட்டாட்சியர் அலுவலகம் : 04633-222212.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி

வெளியீடு :
செ.ம.அ. திருநெல்வேலி